IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.118/2008 Date: 18.06.2025

PW1-ராஜு (எ) ராஜா

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 4 முதல் 11, 14, 15, 24ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2ம் வாதி பட்டப்படிப்பு படித்து முடித்துள்ளார். வழக்கறிஞருக்கு நான் தான் வழக்கு விவரங்கள் சொன்னேன். நான் ஆரம்பத்தில் 11 பிரதிவாதிகள் மீது தான் தாவா தாக்கல் செய்தேன். வம்சாவழிப்பட்டியலும் தாக்கல் செய்துள்ளேன். அது சரியானது தான். வரதப்பகவுண்டருக்கு செல்லப்பகவுண்டர், சின்னாகவுண்டர் ஆகியோர் மகன்கள். நான் வழக்குரையிலும், வம்சாவழிப்பட்டியலிலும் பிரதிவாதிகளின் பெயரை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு வா.சா.ஆ.1 பட்டா பாஸ் புத்தகம் தவிர தற்போது என் வசம் வேறு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.83/1 ல் உள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு சரியாக தெரியாது. அந்த சொத்தை இந்த தாவாவில் சேர்க்க தவறியதற்கு காரணம் உண்டா என்றால் அந்த சொத்தை பொறுத்து எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்பதால் சேர்க்கவில்லை. அந்த சொத்து நாளது தேதிவரை பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதாக என்றால் பிரிக்கப்படவில்லை. வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.83/1 மற்றும் ச.எண்.90 ஆகிய சொத்துக்களுக்கு நானது தேதியில் மொத்தம் நபர்கள் வாரிசு என்றும், அவர்கள் பெயர் விவரமும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது. )

Sd/-ராஜு (எ) ராஜா

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி